# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
வார்டு குழுத்தலைவர்கள், ஆளும்கட்சி
மற்றும் எதிர் கட்சித் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, மேற்கு,
தொண்டாமுத்தூர், பேரூர் மற்றும்
சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதிகள்),
பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் நீலகிரி
பாராளுமன்றத் தொகுதிகள்)

ந.க.எண் : 16368 / 2008 / எம்சி. 8 நாள் : 18.12.2008

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற சாதாரணக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் வருகின்ற 24.12.2008 புதன்கிழமை காலை 10.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத்தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/ உண்மைநகல் / உத்திரவின்படி/

மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## டிசம்பர் 2008 - மாமன்ற சாதாரண கூட்டம் - நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| பொருளடக்கம் | |
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்** |
| 1 | பொறியியல் பிரிவு -நவீன மாமன்ற கூட்ட அரங்கம் கட்டுதல் - ஒப்பந்த விலைப்புள்ளி கோரியது – மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக. |
| 2 | பொறியியல் பிரிவு - குப்பை அகற்றும் வாகனங்கள் வாங்குதல் - மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 3 | வருவாய் பிரிவு - தொழில்வரி உயர்வு செய்தல் -மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக. |
| 4 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 27 – புதிய சலவைத்துறை கட்டுதல் பணி - மாமன்ற ஒப்புதல் கோருதல்- தொடர்பாக. |
| 5 | கல்விப் பிரிவு - தனியார் கட்டிடங்களில் இயங்கிவரும் மாநகராட்சி பள்ளிகள் - வாடகை தொகை செலுத்துதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக. |
| 6 | Jnnurm -பாதாள சாக்கடைத் திட்டம் -நஞ்சுண்டாபுரம் சுத்திகரிப்பு நிலையம் -மூன்றாம் நிலை தரக்கட்டுப்பாடு ஆய்வு மற்றும் ஆலோசனை பெறுதல் -கோவை அரசு பொறியியல் கல்லூரிக்கு ஒப்படைத்தல் -கட்டணம் செலுத்துதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக. |
| 7 | Jnnurm -பாதாள சாக்கடைத் திட்டம் - உக்கடம் சுத்திகரிப்பு நிலையம் -மூன்றாம் நிலை தரக்கட்டுப்பாடு ஆய்வு மற்றும் ஆலோசனை பெறுதல் -கோவை அரசு பொறியியல் கல்லூரிக்கு ஒப்படைத்தல் -கட்டணம் செலுத்துதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக. |
| 8 | Jnnurm –பில்லூர் 2-ம் குடிநீர் திட்டம் - வெள்ளியங்காடு குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் -மூன்றாம் நிலை தரக்கட்டுப்பாடு ஆய்வு மற்றும் ஆலோசனை பெறுதல் -கோவை அரசு பொறியியல் கல்லூரிக்கு ஒப்படைத்தல் -கட்டணம் செலுத்துதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக. |
| 9 | Jnnurm –பில்லூர் 2-ம் குடிநீர் திட்டம் - சிப்பம் 2 –ஒப்பந்த விலைப்புள்ளி கோரியது – மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக. |
| 10 | Jnnurm -பாதாள சாக்கடைத் திட்டம் - ஒண்டிப்புதூர் சுத்திகரிப்பு நிலையம் - நிலம் கையகப்படுத்துதல் - நில மதிப்புத் தொகை அளித்தல் - அரசாணை பதிவு செய்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக. |
| 11 | Jnnurm – நீர்நிலைகளை புனரமைத்தல் -மாநகராட்சி மூலம் செயல்படுத்துதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக. |
| 12 | பணியமைப்பு - திரு எஸ். சந்திரசேகரன் களப்பணி உதவியாளர், திரு என். லோகநாதன் துப்புரவுப்பணி மேற்பார்வையாளர் -துப்புரவு ஆய்வாளராக பதவி உயர்வு அளித்தல் - மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 13 | நகரமைப்புப் பிரிவு -மேற்கு மண்டலம் -சங்கனூர் கிராமம் - க.ச.எண் 305, 306 முதலியவை – ஊர் நத்தம் என மாற்றியமைத்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 14 | தெற்கு மண்டலம் - உக்கடம் பேருந்து நிலையத்தில் ஆவின் பாலகம் அமைத்தல் - ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக. |
| 15 | நகரமைப்புப் பிரிவு - அங்கீகாரமற்ற மனைப்பிரிவு மனைகளை முறைப்படுத்துதல் - அரசு ஆணை பதிவு செய்தல் - தொடர்பாக |
| 16 | தெற்கு மண்டலம் - காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் - நவீன பொதுக்கழிப்பிடம்-இழப்பீட்டுத் தொகை வழங்குதல் -மாமன்ற அனுமதி கோருதல்- தொடர்பாக. |
| 17 | நகரமைப்புப் பிரிவு - கிழக்கு மண்டலம் - உப்பிலிபாளையம் கிராமம் - பலமாடி குடியிருப்புக் கட்டிடம் கட்ட அனுமதி கோரியது – வாபஸ் பெற்றது – கட்டணத்தொகை செலுத்தியது -திரும்பக் கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக. |
| 18 | தெற்கு மண்டலம் - வருடாந்திர உரிம இனங்கள் - ஒப்பந்தப்புள்ளி கோருதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக. |

இணைப்பு - 2
நன்றியுரை

## திருக்குறள்

**நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த**
**தன்மையான் ஆளப் படும்.**

(குறள் -511)

## விளக்கம்

**நன்மை எது தீமை எது என ஆராய்ந்து அறிந்து, நற்செயலில் மட்டுமே நாட்டங் கொண்டவர்கள் எப்பணியினை ஆற்றிடவும் தகுதி பெற்றவராவார்கள்.**

திருவள்ளுவர்.

---

## ஆ. தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி

**இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய/குடிமகளாகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் சமூக வேற்றுமையை, மனம்,வாக்கு,செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதி அளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சாதி, சமய வேறுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும். மேலும், தீண்டத்தகாதவர்கள் என்ற கொடுமைக்கு ஆளாகியுள்ள மக்களிடையே காணப்படும் தீண்டாமை உணர்வையும் போக்குவது நமது சமூகக் கடமை என்பதையும் உணர்ந்து செயல்படுவேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப் பற்றிற்கும் இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.**

---

பொருள் எண் 1

கோவை மாநகராட்சி பிரதான அலுவலகத்தில் புதிதாக அனைத்து வசதிகள் கொண்ட ஒரு நவீன மாமன்ற கூட்ட அரங்கம் பிற மாநகராட்சிகளில் உள்ளதுபோல கோவை மாநகராட்சி பிரதான அலுவலக வளாகத்தில் கட்ட உத்தேசிக்கப்பட்டு, உத்தேச மதிப்பீடு ரூ. 97,00,000/- க்கு நகராட்சி நிர்வாக ஆணையரின் செயல்முறை ந.க.எண்.31730/07/இ3 நாள் 10-09-2007 அன்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கண்காணிப்பு பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.68049/07/வ.அ.1 நாள் 09-01-2008 அன்று தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பணிக்கு 27-03-2008 மற்றும் 20-05-2008 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை. 17-09-2008 அன்று 3வது அழைப்பில் ஒரே ஒப்பந்தப்புள்ளியாக திருவாளர்கள் எம்.எஸ்.இன்ஜினியர்ஸ் - 4.72% மதிப்பீட்டை விட அதிகம் பெறப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 30-10-2008ம் தேதிய கூட்டத்தில் திருவாளர்கள் எம்.எஸ். இன்ஜினியர்ஸ் 4.72% மதிப்பீட்டைவிட அதிகம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம் என பரிந்துரை செய்துள்ளது.

மேற்படி பணி, மாநகராட்சி நிதி நிலை அறிக்கையில் வெளியிடப்பட்டிருப்பதாலும், பணியின் அவசர அவசியத்தை கருதியும், காலதாமதத்தை தவிர்க்கவும் இதைவிட குறைவாக ஒப்பந்தப்புள்ளி கிடைக்க வாய்ப்பு இல்லாததாலும், வரப்பெற்ற ஒரே ஒப்பந்தப்புள்ளியான திருவாளர்கள் எம்.எஸ். இன்ஜினியர்ஸ் 4.72% அதிகம், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டிப் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறுஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 42200/06/எம்.டி.4.

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 300 நாள் : 24.12.2008</u>

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 2

கோவை மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு குப்பை அகற்றும் பணிக்காக தற்பொழுது உள்ள வாகனங்கள் போதாத நிலையில் உள்ளதாகவும் கூடுதலாக வாகனங்கள் வாங்கவும் கடந்த மாமன்ற கூட்டங்களில் பல மாமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தி உள்ளனர். இதனை சுகாதாரக்குழு தலைவர், பணிக்குழு தலைவர், ஆணையாளர் மற்றும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களும் அறுவுறுத்தி உள்ளனர்.

எனவே, நான்கு மண்டலத்திற்கு தலா ஒரு மண் மற்றும் குப்பை வாரும் இயந்திரம் (ஜே.சி.பி.போன்றவை) மொத்தம் (4) நான்கு எண்ணிக்கைகள் வாங்கலாம். மேற்படி இயந்திரங்களுக்கு DGSD விலைவிகிதப் பட்டியல் (DGSD rate contract price) இல்லாததால் அவற்றினை உற்பத்தியாளர்களிடமிருந்தோ அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்களிடமிருந்தோ வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.96.00 இலட்சம் ஆகும்.

ஆகையால் நான்கு எண்ணிக்கைகள் மண் மற்றும் குப்பைவாரும் வாகனங்கள் வாங்குவதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.96.00 இலட்சத்திற்கு அனுமதி வேண்டியும் இவ்வாகனங்கள் வாங்குவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களுக்கு பரிந்துரை செய்யவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :அனுமதிக்கலாம் ந.க.எண். 15357/2008/எம்.டி.3

**மா.ந.ம.தீர்மானம் எண் : 301 நாள் : 24.12.2008**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 3

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி- தொழில்வரி உயர்வு செய்தல் - தொடர்பாக.

பார்வை - 1) அரசு ஆணை (MS ) எண். 11, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 12.01.99
2) நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் எண். 38714/2008/R 1 நாள் 13.08.2008
3) வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண். 10 நாள் 17.11.2008

--------

பார்வை 1-ல் காணும் அரசு ஆணை மற்றும் பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (தொழில்வரி) விதிகள் 1999, விதி 16-ன்படி, 1.10.1998 முதல் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தொழில்வரி 25% முதல் 35% வரை உயர்வு செய்து மன்றத்தால் நிர்ணயம் செய்யப்படவேண்டும் என உள்ளது.

தற்போது இம்மாநகராட்சியில் கீழ்க்கண்ட விகிதத்தில் 1.10.2003 முதல் தொழில்வரி வசூலிக்கப்பட்டு வருகிறது.

| வரிசை எண் | அரையாண்டு வருமானம் | தொழில் வரி |
|---|---|---|
| 1 | ரூ. 21,000 வரை | இல்லை |
| 2 | ரூ. 21,001 முதல் 30,000 வரை | ரூ. 75/- |
| 3 | ரூ. 30,001 முதல் 45,000 வரை | ரூ. 188/- |
| 4 | ரூ. 45,001 முதல் 60,000 வரை | ரூ. 375/- |
| 5 | ரூ. 60,001 முதல் 75,000 வரை | ரூ. 563/- |
| 6 | ரூ. 75,000-க்கு மேல் | ரூ. 750/- |

பார்வையிற் காணும் அரசு ஆணையின்படி 25 சதவீதம் முதல் 35 சதவீதம் வரை வரிஉயர்வு செய்து நிர்ணயம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது 17.11.08-ம் தேதிய தீர்மானம் எண். 10-ன்படி, ‘‘கோவை மாநகராட்சியில் தற்பொழுது சொத்துவரி, தண்ணீர்வரி உயர்வு செய்யப்பட்டுள்ளது. ஆகவே மீண்டும் தொழில்வரி அதிகப்படுத்தினால் மக்கள் துன்பப்படக்கூடும். ஆகவே விடுபட்ட தொழில்வரி இனங்களை கண்டுபிடித்து வரிவிதிப்பு செய்தாலே கணிசமான வரியின் தொகை அதிகமாக கிடைக்கும் என வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவில் தீர்மானிக்கப்படுகிறது ’’ என முடிவு செய்துள்ளது.

அரசு ஆணையின்படி, 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை தொழில்வரி உயர்வு செய்யப்பட வேண்டும். கோவை மாநகராட்சியில் 1.10.08 முதல் தொழில்வரி குறைந்தது 25 சதவீதம் முதல் 35 சதவீதம் வரை உயர்வு செய்யப்பட வேண்டும்.

உயர்வு செய்வதால் ஏற்படும் தொழில்வரி பற்றிய விபரம்

| வ. எண் | அரையாண்டு வருமானம் | தொழில் வரி (ரூ.) | | | |
|---|---|---|---|---|---|
| | | தற்போது உள்ளது | 25% உயர்வு | 30% உயர்வு | 35% உயர்வு |
| 1 | ரூ. 21,000 வரை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| 2 | ரூ. 21,001 முதல் 30,000 வரை | ரூ. 75/- | 94/- | 98/- | 101/- |
| 3 | ரூ. 30,001 முதல் 45,000 வரை | ரூ. 188/- | 235/- | 244/- | 254/- |
| 4 | ரூ. 45,001 முதல் 60,000 வரை | ரூ. 375/- | 469/- | 488/- | 506/- |
| 5 | ரூ. 60,001 முதல் 75,000 வரை | ரூ. 563/- | 704/- | 732/- | 760/- |
| 6 | ரூ. 75,000-க்கு மேல் | ரூ. 750/- | 938/- | 975/- | 1013/- |

எனவே தொழில்வரியை உயர்வு செய்து நிர்ணயம் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அரசு ஆணையின்படி, தொழில் வரி 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை குறைந்தபட்சமாக 25 சதவீதம் முதல் உயர்ந்த பட்சமாக 35 சதவீதம் வரை உயர்வு செய்யப்பட வேண்டும். எனவே 25 % மட்டும் உயர்வு செய்து நிர்ணயம் செய்யலாம்.

ந.க.எண். 11325/08/எம்.ஏ. 1

மா.ந.ம.தீர்மானம் எண் : 302 நாள் : 24.12.2008

கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள தொழில்வரி நிர்ணயம் செய்யப்படவேண்டிய அனைத்து நபர்கள் மற்றும் நிறுவனங்களை கண்டறிந்து தொழில்வரி வசூலிக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதன்மூலம், தொழில்வரி கேட்பினை கணிசமாக உயர்த்த இயலும் என்பதனால் அதற்குரிய நடவடிக்கைகள் எடுத்து ஒட்டுமொத்த தொழில்வரி கேட்பினை உயர்த்த தீர்மானிக்கப்பட்டது.

தொழில்வரி மூலம் வசூலிக்கப்படவேண்டிய கேட்பு, வசூல், நிலுவை முதலிய அனைத்து முழுமையான விபரங்களுடன் மீண்டும் மன்றத்திற்கு பொருள் வைக்க தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 4

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிக்கு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 6537/08/ எம்.டி.3 | வார்டு எண் 27-ல் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் காளீஸ்வரா நகர் பகுதியில் புதிய சலவை துறை கட்டும் பணி | 8.00 | 07.08.08 முதல் அழைப்பு | தி/ள்.கே.சி.பி. இன்ஜினியர் & பேப்ரிகேட்டர் | 4.92 அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு- இப்பணி குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணி அதிக மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 6537/08/எம்.டி.3

மா.ந.ம.தீர்மானம் எண் : 303 நாள் : 24.12.2008

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 5

பொருள்: மாநகராட்சி ஆரம்பப் பள்ளிகள் - வாடகை கட்டிடங்கள் 2008-09ம் ஆண்டிற்கு வாடகை தொகை – உரிமையாளருக்கு – வழங்க மன்றத்தின் ஒப்புதல் பெறுவது – தொடர்பாக.

--------------

03.11.2008-ம் நாளிட்ட கல்விக்குழு தீர்மான எண்.1-ல் ஒப்புதல் பெறப்பட்ட மாநகராட்சியின் சொந்த கட்டிடம் இல்லாத தனியார் கட்டிடங்களில் இயங்கிவரும் சிங்காநல்லூர் பகுதியிலுள்ள மாநகராட்சியின் கீழ்காணும் 2 பள்ளிகளுக்கு 2008-09-ம் ஆண்டில் ஓர் ஆண்டிற்கு வழங்கப்பட வேண்டிய தொகை ரூ.60,144/- (ரூபாய் அறுபது ஆயிரத்து நூற்றி நாற்பத்து நான்கு மட்டும்) கட்டிட உரிமையாளருக்கு மாநகராட்சி நிதியிலிருந்து செலவிட கல்விக்குழுவின் அனுமதி பெற்று மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பள்ளியின் பெயர் | மாதம் தோறும் வழங்கப்படும் வாடகை | ஓராண்டிற்கு | வழங்கப்பட வேண்டிய கட்டிட உரிமையாளர் |
|---|---|---|---|---|
| 1. | சிங்காநல்லூர் (கிழக்கு) ஆரம்பப்பள்ளி | ரூ. 2,633/- | ரூ. 31,596/- | தலைவர் சிங்காநல்லூர் ஆதிதிராவிடர் சமூக சங்க அறக்கட்டளை |
| 2. | சிங்காநல்லூர் (தெற்கு) ஆரம்பப்பள்ளி | ரூ.2,379/- | ரூ. 28,548/- | செயலாளர் அஸ்தாந்திர கொல்ல சமூக சங்கம், சிங்காநல்லூர் |
| | மொத்தம் | ரூ. 5,012/- | ரூ. 60,144/- | - |

அலுவலக்குறிப்பு-ஒப்புதல் வழங்கலாம் ந.க. எண். 3367 /2007 / கே 14

**மா.ந.ம.தீர்மானம் எண் : 304 நாள் : 24.12.2008**

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 6

கோயம்புத்தூர் மாநகராட்சி, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் ரூ.377.13 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் ஒருங்கிணைந்த பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ், நஞ்சுண்டாபுரத்தில் 40 எம்.எல்.டி. கொள்ளளவு திறன் கொண்ட நவீன கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணியினை ரூ. 32.22கோடி மதிப்பீட்டு தொகையில் வடிவமைத்து, நிறுவி, இயக்கி, ஐந்து வருட காலம் பராமரித்து மாநகராட்சி வசம் ஒப்படைக்கும் பணிக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரியதில் குறைந்த ஒப்பந்தவிலைப்புள்ளி கொடுத்துள்ள, தி/ள். இந்துஸ்தான் டோர் ஆலிவர் லிமிடெட், மும்பை நிறுவனத்திடம் கட்டுமான பணிக்கான ஒப்பந்த மதிப்பு ரூ.33.79 கோடியில் பணி மேற்கொள்ள கடந்த 28.04.2008–ல் ஒப்படைக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

இப்பணிக்கு மேற்படி நிறுவனத்தால் நவீன கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் தொடர்புடைய அனைத்து உட்பிரிவு கட்டிட பணிகளை வடிவமைத்து வழங்கப்படும் வரைபடங்களை கூர்ந்தாய்வு செய்து ஒப்புதல் வழங்கவும், ஒப்புதல் பெறப்பட்ட வரைபடங்கள், கட்டிட வடிவமைப்பு மற்றும் வடிவமைப்பு கணக்கீட்டு அளவுகளை (Structural Design and Calculations) சரிபார்த்து ஒப்புதல் வழங்கவும் கட்டப்படும் கட்டிடங்களில் மின்வசதி, சுத்திகரிப்பு பணிக்கான இயந்திர இயக்க பணிகளுக்கு ஒப்புதல் வழங்கவும், வடிவமைப்பின்படி கட்டிட பணிகள், இயந்திர பணிகள் மற்றும் மின்வசதிகள் செய்து தரும் பணிகள் துவக்கப்பட்டு முடிவுறும் வரையில் மாநகராட்சி பொறியாளர்களுடன் கள ஆய்வு செய்து திருத்தங்கள், விளக்கங்கள் மற்றும் அறிவுரைகள் அளித்து தரத்தினை உறுதிபடுத்தி, பணிகள் தொய்வின்றி நடைபெறுவதற்கு உதவும் பொருட்டு ‘‘மூன்றாம் நிலை தரக்கட்டுப்பாடு ஆய்வு மற்றும் ஆலோசனை (Third Party Quality Inspection)’’ வழங்க மாநகராட்சியில் பணி அமர்த்தப்பட்டுள்ள பொறியாளர்கள் இருப்பினும், அரசு பொறியியல் கல்லூரி வல்லுநர்களை கொண்ட குழுவினை பயன்படுத்த வேண்டியுள்ளது.

இதற்கான அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கடந்த 29.09.2008–ல் முன்மொழிவுகள் அனுப்பப்பட்டது. கோவை அரசு பொறியியல் கல்லூரி பேராசிரியர்கள், உதவி பேராசிரியர்கள் உள்ளடக்கிய குழுவினை நியமித்து அமைக்கப்படவுள்ள நவீன கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய கட்டிட பணிக்கான வடிவமைப்புகளை சரிபார்த்து திட்ட ஆலோசனை பெறவும் அதற்கான கட்டணமாக ஒப்பந்த / மதிப்பீட்டுத் தொகையில் 0.5% சதவீத தொகையினை வழங்கவும் மேற்படி செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி அளித்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடமிருந்து ந.க.எண். 13806/07/JNN-1 நாள்: 17.11.2008–ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு, மூன்றாம் நிலை தரக்கட்டுப்பாட்டு ஆலோசனை பணியினை கோவை அரசு பொறியியல் கல்லூரிக்கு ஒப்படைக்கவும், 0.5% சதவீத மதிப்பீடு தொகையான ரூ. 16,11,000/– ஐ (ரூபாய் பதினாறு லட்சத்து பதினொரு ஆயிரம் மட்டும்) மேற்படி கல்லூரிக்கு செலுத்தவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u> நஞ்சுண்டாபுரத்தில் அமைக்கப்பட்டு வரும் 40 எம்.எல்.டி கொள்ளளவு திறன் கொண்ட நவீன சுத்திகரிப்பு நிலைய கட்டுமான பணிக்காக ஒப்பந்ததாரரால் தயாரித்து வழங்கப்படும் அனைத்து உட்பிரிவு கட்டிட பணிக்கான வரைபடங்கள், வடிவமைப்பு கணக்கீட்டு அளவுகள், வடிவமைப்பு வரைபடங்கள் மற்றும் கள ஆய்வுடன், தர ஆய்வு பணியினையும் கோவை அரசு பொறியியல் கல்லூரி மேற்கொள்ளவும் மேலும் "மூன்றாம் நிலை தரக்கட்டுப்பாட்டு ஆய்வு மற்றும் ஆலோசனை (Third Party Quality Inspection)" வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் ஒப்புதல் வழங்கியுள்ளதை மாமன்றம் பதிவு செய்து அதற்கான செலவினம் (மதிப்பீட்டு தொகையில் 0.5% சதவீதம்) ரூ. 16,11,000/–ஐ (ரூபாய் பதினாறு லட்சத்து பதினொரு ஆயிரம்) மட்டும் மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.11234/2008/JN 2

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 305 நாள் : 24.12.2008</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 7

கோயம்புத்தூர் மாநகராட்சி, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் ரூ.377.13 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் ஒருங்கிணைந்த பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ், உக்கடம் பகுதியில் 70 எம்.எல்.டி. கொள்ளளவு திறன் கொண்ட நவீன கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணியினை ரூ. 52.44கோடி மதிப்பீட்டு தொகையில் வடிவமைத்து, நிறுவி, இயக்கி, ஐந்து வருட காலம் பராமரித்து மாநகராட்சி வசம் ஒப்படைக்கும் பணிக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரியதில் குறைந்த ஒப்பந்தவிலைப்புள்ளி கொடுத்துள்ள, தி/ள். காா்புரே இன்சினியரிங் அண்டு கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் (பி) லிட், புனே நிறுவனத்திடம் கட்டுமான பணிக்கான ஒப்பந்த மதிப்பு ரூ.55.00 கோடியில் பணி மேற்கொள்ள கடந்த 28.04.2008–ல் ஒப்படைக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

இப்பணிக்கு மேற்படி நிறுவனத்தால் நவீன கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் தொடர்புடைய அனைத்து உட்பிரிவு கட்டிட பணிகளை வடிவமைத்து வழங்கப்படும் வரைபடங்களை கூர்ந்தாய்வு செய்து ஒப்புதல் வழங்கவும், ஒப்புதல் பெறப்பட்ட வரைபடங்கள், கட்டிட வடிவமைப்பு மற்றும் வடிவமைப்பு கணக்கீட்டு அளவுகளை (Structural Design and Calculations) சரிபார்த்து ஒப்புதல் வழங்கவும் கட்டப்படும் கட்டிடங்களில் மின்வசதி, சுத்திகரிப்பு பணிக்கான இயந்திர இயக்க பணிகளுக்கு ஒப்புதல் வழங்கவும், வடிவமைப்பின்படி கட்டிட பணிகள், இயந்திர பணிகள் மற்றும் மின்வசதிகள் செய்து தரும் பணிகள் துவக்கப்பட்டு முடிவுறும் வரையில் மாநகராட்சி பொறியாளர்களுடன்

கள ஆய்வு செய்து திருத்தங்கள், விளக்கங்கள் மற்றும் அறிவுரைகள் அளித்து தரத்தினை உறுதிபடுத்தி, பணிகள் தொய்வின்றி நடைபெறுவதற்கு உதவும் பொருட்டு "மூன்றாம் நிலை தரக்கட்டுப்பாடு ஆய்வு மற்றும் ஆலோசனை (Third Party Quality Assurance)" வழங்க மாநகராட்சியில் பணி அமர்த்தப்பட்டுள்ள பொறியாளர்கள் இருப்பினும், அரசு பொறியியல் கல்லூரி வல்லுநர்களை கொண்ட குழுவினை பயன்படுத்த வேண்டியுள்ளது. இதற்கான அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கடந்த 29.09.2008–ல் முன்மொழிவுகள் அனுப்பப்பட்டது. கோவை அரசு பொறியியல் கல்லூரி பேராசிரியர்கள், உதவி பேராசிரியர்கள் உள்ளடக்கிய குழுவினை நியமித்து அமைக்கப்படவுள்ள நவீன கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய கட்டிட பணிக்கான வடிவமைப்புகளை சரிபார்த்து திட்ட ஆலோசனை பெறவும் அதற்கான கட்டணமாக ஒப்பந்த / மதிப்பீட்டுத் தொகையில் 0.5% சதவீத தொகையினை வழங்கவும் மேற்படி செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி அளித்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடமிருந்து ந.க.எண். 13806/07/JNN-1 நாள்: 17.11.2008–ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு, மூன்றாம் நிலை தரக்கட்டுப்பாட்டு ஆலோசனை பணியினை கோவை அரசு பொறியியல் கல்லூரிக்கு ஒப்படைக்கவும், 0.5% சதவீத மதிப்பீடு தொகையான ரூ. 26,22,000/–ஐ (ரூபாய் இருபத்தாறு இலட்சத்து இருபத்திரண்டு ஆயிரம் மட்டும்) மேற்படி கல்லூரிக்கு செலுத்தவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u> உக்கடம் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் 70 எம்.எல்.டி கொள்ளளவு திறன் கொண்ட நவீன சுத்திகரிப்பு நிலைய கட்டுமான பணிக்காக ஒப்பந்ததாரரால் தயாரித்து வழங்கப்படும் அனைத்து உட்பிரிவு கட்டிட பணிக்கான வரைபடங்கள், வடிவமைப்பு கணக்கீட்டு அளவுகள், வடிவமைப்பு வரைபடங்கள் மற்றும் கள ஆய்வுடன், தர ஆய்வு பணியினையும் கோவை அரசு பொறியியல் கல்லூரி மேற்கொள்ளவும் மேலும் "மூன்றாம் நிலை தரக்கட்டுப்பாட்டு ஆய்வு மற்றும் ஆலோசனை (Third Party Quality Inspection)" வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் ஒப்புதல் வழங்கியுள்ளதை மாமன்றம் பதிவு செய்து அதற்கான செலவினம் (மதிப்பீட்டு தொகையில் 0.5% சதவீதம்) ரூ. 26,22,000/– ஐ (ரூபாய் இருபத்தாறு இலட்சத்து இருபத்திரண்டு ஆயிரம்) மட்டும் மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்.11231/2008/JN 2

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 306 நாள் : 24.12.2008</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 8

கோயம்புத்தூர் மாநகராட்சி, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் ரூ.113.74 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் பில்லூர் இரண்டாவது தனி குடிநீர் திட்டத்தின் கீழ், சிப்பம் 3 பணியான வெள்ளியங்காடு பகுதியில் 125 எம்.எல்.டி. கொள்ளளவு திறன் கொண்ட நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணியினை ரூ. 28.60 கோடி மதிப்பீட்டு தொகையில் வடிவமைத்து, நிறுவி, இயக்கி, ஐந்து வருட காலம் பராமரித்து மாநகராட்சி வசம் ஒப்படைக்கும் பணிக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரியதில், குறைந்த ஒப்பந்தவிலைபுள்ளி கொடுத்துள்ள தி/ள். கிர்லோஸ்கர் பிரதர்ஸ் லிமிடெட், மும்பை நிறுவனத்திடம் கட்டுமான பணிக்கான ஒப்பந்த மதிப்பு ரூ.20.94 கோடியில் பணி மேற்கொள்ள கடந்த 13.05.2008–ல் ஒப்படைக்கப்பட்டு பணி துவக்கப்பட்டுள்ளது.

இப்பணிக்கு மேற்படி நிறுவனத்தால் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் தொடர்புடைய அனைத்து உட்பிரிவு கட்டிட பணிகளை வடிவமைத்து வழங்கப்படும் வரைபடங்களை கூர்ந்தாய்வு செய்து ஒப்புதல் வழங்கவும், ஒப்புதல் பெறப்பட்ட வரைபடங்கள், கட்டிட வடிவமைப்பு மற்றும் கணக்கீட்டு அளவுகளை (Structural Design and Calculations) சரிபார்த்து ஒப்புதல் வழங்கவும் கட்டப்படும் சுத்திகரிப்பு நிலைய கட்டிடங்களில் மின்வசதி, சுத்திகரிப்பு பணிக்கான இயந்திர இயக்கப்பணிகளுக்கு ஒப்புதல் வழங்கவும், வடிவமைப்பின்படி கட்டிட பணிகள், இயந்திர பணிகள் மற்றும் மின்வசதிகள் செய்து தரும் பணிகள் முடிவுறும் வரையில் மாநகராட்சி பொறியாளர்களுடன் கள ஆய்வு செய்து திருத்தங்கள், விளக்கங்கள் மற்றும் அறிவுரைகள் அளித்து தரத்தினை உறுதிப்படுத்தி, பணிகள் தொய்வின்றி நடைபெறுவதற்கு உதவும் பொருட்டு ''மூன்றாம் நிலை தரக்கட்டுப்பாடு ஆய்வு மற்றும் ஆலோசனை (Third Party Quality Inspection)'' வழங்க மாநகராட்சியில் பணி அமர்த்தப்பட்டுள்ள பொறியாளர்கள் இருப்பினும், அரசு பொறியியல் கல்லூரி வல்லுநர்களை கொண்ட குழுவினை பயன்படுத்த வேண்டியுள்ளது.

இதற்கான அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கடந்த 29.09.08–ல் வரைவு அனுப்பப்பட்டது. கோவை அரசு பொறியியல் கல்லூரி பேராசிரியர்கள், உதவி பேராசிரியர்கள் உள்ளடங்கிய குழுவினை நியமித்து அமைக்கப்படவுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலைய கட்டிய பணிக்கான வடிவமைப்புகளை சரிபார்த்து திட்ட ஆலோசனை பெறவும், அதற்கான கட்டணமாக ஒப்பந்த / மதிப்பீட்டுத் தொகையில் 0.5% சதவீத தொகையினை வழங்கவும் மேற்படி செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி அளித்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடமிருந்து ந.க.எண். 13806/07/JNN-1 நாள்: 17.11.2008–ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி பணிக்கு மூன்றாம் நிலை தரக்கட்டுப்பாட்டு ஆலோசனை பணியினை கோவை அரசு பொறியியல் கல்லூரிக்கு ஒப்படைக்கவும், 0.5% சதவீத ஒப்பந்த தொகையாக ரூ. 10,46,940/–ஐ (ரூபாய் பத்து லட்சத்து நாற்பத்தி ஆறாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பது மட்டும்) மேற்படி கல்லூரிக்கு செலுத்தவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u> வெள்ளியங்காடு பகுதியில் அமைக்கப்பட்டு வரும் 125 எம்.எல்.டி. கொள்ளளவு திறன் கொண்ட நவீன குடிநீர் சுத்திகரிப்பு நிலைய கட்டுமான பணிக்காக ஒப்பந்ததாரரால் தயாரித்து வழங்கப்படும் அனைத்து உட்பிரிவு கட்டிட பணிக்கான வரைபடங்கள், வடிவமைப்பு கணக்கீட்டு அளவுகள், வடிவமைப்பு வரைபடங்கள் மற்றும் கள ஆய்வுடன், தர ஆய்வு பணியினையும் கோவை அரசு பொறியியல் கல்லூரி மேற்கொள்ளவும் மேலும் ''மூன்றாம் நிலை தரக்கட்டுப்பாடு ஆய்வு மற்றும் ஆலோசனை (Third Party Quality Inspection)'' வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் ஒப்புதல் வழங்கியுள்ளதை மாமன்றம் பதிவு செய்து அதற்கான செலவினம் (ஒப்பந்ததாரரின் கட்டுமான பணிக்கான ஒப்பந்த மதிப்பு தொகையில் 0.5% சதவீதம்) ரூ. 10,46,940/–ஐ (ரூபாய் பத்து லட்சத்து நாற்பத்தி ஆறாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பது) மட்டும் மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 11235/08/JN2

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 307 நாள் : 24.12.2008</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 9

கோவை மாநகராட்சிக்கென தனி குடிநீர் திட்டமாக பில்லூர் இரண்டாவது திட்டம், ஜவகர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 113.74 கோடி செலவில் மேற்கொள்ள அரசு ஆணை எண் (டி) 160 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:17.04.2007 மற்றும் அரசு ஆணை எண். 551 (டி) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 13.11.2007–ல் பெறப்பட்டு, குடிநீர் திட்டப் பணியினை ஆறுபகுதிகளாகப் பிரித்து ஐந்து பகுதிகளுக்கான பணியினை மேற்கொள்ள ஒப்பந்தவிலைப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதில் கீழ் குறிப்பிட்டுள்ள சிப்பம் (2) பணிக்கு நான்காம் முறையாக கடந்த 07.08.2008–ல் ஒப்பந்த விலைப்புள்ளி கோரப்பட்டதின் விபரம்.

| சிப்பம் எண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | தொழில் நுட்ப அங்கீகார எண் |
|---|---|---|---|
| II | பெரிய கோம்பை மலை குகை வெளியேற்றத்திலிருந்து வெள்ளியங்காடு சுத்திகரிப்பு நிலையம் வரை 1500 எம். எம் விட்டம் உள்ள பி.எஸ்.சி (PSC) குழாய் பதிக்கும் பணி | 167.00 (மதிப்பீடுதொகை)<br>195.00 (திருத்திய மதிப்பீடு தொகை) | 83 / 2007–08<br>28 / 2008–09 |

மேற்படி ஒப்பந்த விலைப்புள்ளியில் கீழ்கண்ட நிறுவனம் மட்டும் கலந்துகொண்டு தொழில்நுட்ப தகுதி (Technical Bid) மற்றும் ஒப்பந்த விலைபுள்ளி (Financial Bid) கடந்த 07.08.2008–ல் வழங்கியது.

1. **M/s Indian Hume pipe Company Ltd., Mumbai.**
   **(M/s இந்தியன் ஹூம் பைப் கம்பெனி லிட், மும்பை)**

இந்நிறுவனத்தின் தொழில் நுட்ப தகுதியினை தமிழ்நாடு குடிநீர் முதலீட்டு நிறுவனம் (TWIC) ஆய்வு செய்து அறிக்கை தந்ததின் பேரில், மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு (Tenders Scrutiny Committee) கூர்ந்தாய்வு செய்து, மாநில அளவிலான தொழில்நுட்ப கமிட்டிக்கு (Technical Standing Committee) அனுப்பப்பட்டு 07.10.2008–ல் தொழில்நுட்ப தகுதி ஆய்வு அனுமதி பெறப்பட்டதின் பேரில் மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளி (Financial Bid) கடந்த 17.10.2008–ல் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதின் விபரமும், மேற்படி நிறுவனத்திடம் பொறியியல் நடைமுறை விதிகளின் படி, விலை குறைப்பு செய்திட சம்மத கடிதம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு அதன்பேரில் இந்நிறுவனத்திடமிருந்து மூன்று முறை வரப்பட்ட சம்மத கடிதத்தின் பேரில் தயாரிக்கப்பட்ட ஒப்புநோக்கு பட்டியல் விபரம் பின் வருமாறு:

| வ. எண், | நிறுவனம் | ஒப்பந்த மதிப்பு | ஒப்பந்த விலை புள்ளி விபரம் / திறப்பு நாள் | விலை குறைப்பு கடிதம் அளித்த நாள் | ஒப்பந்த விலை புள்ளி விபரம் (விலைகுறைப்பிற்கு பின்னர்) | மதிப்பீட்டு தொகைக்கு அதிகம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 01 | M/s. இந்தியன் ஹூம் பைப் கம்பெனி லிட், மும்பை | ரூ1,80,67,159.31 | ரூ.2,75,59,861.31<br>நாள் 07.10.2008 | –<br>29.10.2008<br>21.11.2008<br>04.12.2008 | –<br>ரூ.2,70,08,664.08<br>ரூ.2,36,28,000.00<br>ரூ.2,32,52,256.00 | + 52.54%<br>+ 50.54%<br>+ 30.78%<br>+ 28.70% |

நான்காவது முறையாக விலைகுறைப்பு கோரியதில், இறுதியாக மூன்றாவது முறை விலைகுறைப்பிற்கு பின்னர் M/s இந்தியன் ஹூம் பைப் கம்பெனி லிட், மும்பை என்ற நிறுவனத்தின் ஒப்பந்த விலைப்புள்ளி, மதிப்பீட்டு தொகைக்கு 28.70% அதிகமாக உள்ளதால் மேற்படி ஒப்பந்தப்விலைபுள்ளியினை பரிசீலனை செய்து முடிவு எடுக்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு – அ) மதிப்பீட்டு தொகைக்கு 5% சதவீதம் கூடுதலாக பெறப்படும் ஒப்பந்த விலைபுள்ளிகளை பரிசீலனை செய்து முடிவு செய்ய மாநில அளவிலான "ஒப்பந்தபுள்ளி உறுதி செய்யும் குழு" அரசால் அரசாணை எண். 34 ந.நி.ம.கு.வ.துறை நாள் 22.03.2006–ன் படி அமைக்கப்பட்டுள்ளதால் மேற்படி ஒப்பந்தவிலைபுள்ளியினை பரிசீலித்து முடிவு செய்ய "ஒப்பந்தபுள்ளி உறுதி செய்யும் குழுவின்" பரிசீலனைக்கு அனுப்ப மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கு நான்காம் முறையாக தேசிய அளவிலான ஒப்பந்தவிலைப்புள்ளி கோரியதில் வரப்பட்டுள்ள ஒரே ஒரு ஒப்பந்தவிலைப்புள்ளியான M/s இந்தியன் ஹூம் பைப் கம்பெனி லிட், மும்பை அவர்களின் ஒப்பந்தவிலைப்புள்ளி மூன்றாவது முறையாக விலை குறைப்புக்கு பின்னர் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 28.70% கூடுதலாக உள்ளதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழு பரிசீலனை செய்து மேற்க்கொள்ளும் முடிவினை மாமன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

இ) அரசால் நிர்வாக அனுமதி பெறப்பட்ட மொத்த திட்ட மதிப்பீட்டு தொகைக்கு மேல் இப்பணிக்கு கூடுதலாக ஏற்படும் செலவினத்தை மாநகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்தோ அல்லது பொது நிதியிலிருந்தோ மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 4611 / 2008 / ஜே.என். 2

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 308 நாள் : 24.12.2008</u>

விலைக் குறைப்பிற்குப்பின், மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு 28.70% கூடுதலாக ஒப்பந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள M/S. இந்தியன் ஹூம் பைப் கம்பெனி லிட், மும்பை அவர்களின் ஒப்பந்த விலைப்புள்ளியினை, ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யும் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பவும், மேற்படி குழு மேற்கொள்ளும் முடிவினை மாமன்றம் ஒப்புக் கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் நிர்வாக அனுமதி பெறப்பட்ட மொத்த திட்ட மதிப்பீட்டுத் தொகைக்கு மேல் இப்பணிக்கு கூடுதலாக ஏற்படும் செலவினத்தை மாநகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்தோ அல்லது பொது நிதியிலிருந்தோ மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 10

மத்திய அரசின் கோயம்புத்தூர் மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சியால் ரூ.377.13 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டத்தினை செயல்படுத்த அரசாணை (3ப) எண்.25 ந.நி.கு.வ (ந.நி3) துறை நாள்: 24.10.2007–ல் நிர்வாக அனுமதி, பெறப்பட்டு திட்டப்பணிகள் ஆறு (6) சிப்பங்களாகப் பிரிக்கப்பட்டு ஐந்து (5) சிப்ப பணிகளில் இரு சிப்பப்பணிகள் துவங்கப்பட்டும், மூன்று சிப்ப பணிகளுக்கு ஒப்பந்த விலைப்புள்ளிகள் கோரப்பட்டும் நடவடிக்கையில் உள்ளது. சிப்பம் 6 பகுதி பணியான ஒண்டிப்புதூர், சிங்காநல்லூர் கிராமப்பகுதியில் 60 எம்.எல்.டி கொள்ளளவு திறன் கொண்ட நவீன கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்கான நிலம் மாநகராட்சி வசம் போதிய அளவு இல்லாததால் தனியார் நிலம் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்பேரில் ஒண்டிபுதூர் சிங்காநல்லூர் கிராம பகுதியில் தனியாருக்கு சொந்தமானதும் புல எண்கள்

758/1 (பாகம்), 758/2 (பாகம்), 761/3ஏ,761/3பி, 761/3சி,761/3டி, 762/2, 762/3ஏ, 762/3பி, 762/3சி, 762/4 மற்றும் 762/5—க்கு சம்பந்தப்பட்டுள்ள 14.40 ஏக்கர் நிலத்தினை தேர்வு செய்து கையகப்படுத்தி நவீன சுத்திகரிப்பு நிலையம் அமைக்க முடிவு செய்யப்பட்டது.

அதற்கான முன்மொழிவுகள் மாமன்றத் தீர்மான எண். 253, நாள்: 21.01.2008 ஒப்புதலுடன் கோவை மாவட்ட ஆட்சி தலைவர் மூலம் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களுக்கு கடந்த 26.07.2008—ல் அனுப்பப்பட்டது. மேற்படி கிராமப்பகுதியில் மாநகராட்சி கையகப்படுத்தப்பட வேண்டிய 14.40 ஏக்கர் நிலத்தில் புல எண். 762/4 ஐ தவிர மற்ற அனைத்து நிலங்களும் புஞ்சை நிலங்கள் எனவும், புல எண்.762/4ல் உள்ள 0.05 ஏக்கர் நிலம் "அரசு இட்டேரி புறம்போக்கு" என வகைப்பாடு செய்யப்பட்டு மாவட்ட நிர்வாகத்தால் பரிந்துரை செய்யப்பட்டு, கையகப்படுத்துவதற்கான செலவின தொகை கீழ்கண்டுள்ளவாறு நிர்ணயிக்கப்பட்டு சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையாளரால் ஏற்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| வழிகாட்டி மதிப்பின் அடிப்படையில் நிலத்தின் தோராய மதிப்பு | ரூ.12,65,73,500/— |
| கட்டிடம் மற்றும் மரத்தின் மதிப்பு | ரூ.35,150/— |
| மொத்தம் | ரூ.12,66,08,650/— |
| 30% ஆறுதல் தொகை | ரூ.3,79,82,595/— |
| 14.5% நிர்வாக செலவுத்தொகை | ரூ.1,83,58,254/— |
| விளம்பரத்தொகை | ரூ.25,000/— |
| மொத்தம் | ரூ.18,29,74,499/— அல்லது ரூ.18,29,74,500 |

ஒண்டிபுதூர் பகுதியில் 60 எம்.எல்.டி கொள்ளளவு திறன் கொண்ட நவீன கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கத் தேவைபடும் 14.40 ஏக்கர் நிலத்தினை நில எடுப்பு சட்டம் 1894, அவசர பிரிவு 17(2) ன் படி கையகப்படுத்தவும் அதற்கான நில மதிப்பு தொகையான ரூ.18,29,74,500/—ஐ (ரூபாய் பதினெட்டு கோடியே இருபத்தொன்பது இலட்சத்து எழுபத்து நான்காயிரத்து ஐநூறு) ஒருங்கிணைந்த பாதாள சாக்கடை திட்டத்திற்கென அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள மொத்த மதிப்பீட்டுத்தொகையான ரூ.377.13 கோடியில், நிலம் கையகப்படுத்துவதற்கான தொகை அடங்கவில்லை என்பதால், இச்செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கியும் நிலத்தினை கையகப்படுத்துவதற்கு ஒப்புதல் வழங்கியும் தமிழக அரசால் வெளியிடப்பட்டுள்ள அரசாணை (நிலை) எண். 236, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை நாள் 01.12.2008—ஐ மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யவும், சிங்காநல்லூர் கிராமம் பகுதியில் 14.40 ஏக்கர் தனியார் நிலத்தினை நவீன கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நில மதிப்பு ரூ.18,29,74,500/—ஐ (ரூபாய் பதினெட்டு கோடியே இருபத்தொன்பது இலட்சத்து எழுபத்து நான்காயிரத்து ஐநூறு மட்டும்) மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து செலுத்தி கையகப்படுத்த மாமன்றம் ஒப்புதல் வழங்கவும் பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1. அரசாணை (நிலை) எண்.236, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை, நாள் 01.12.2008—ஐ மாமன்றம் பதிவு செய்யலாம்.

2. கோவை தெற்கு வட்டம், சிங்காநல்லூர் கிராமம் புல எண்கள் 758/1 (பாகம்), 758/2 (பாகம்), 761/3ஏ,761/3பி, 761/3சி,761/3டி, 762/2, 762/3ஏ, 762/3பி, 762/3சி, 762/4 மற்றும் 762/5—ல் உள்ள நிலம் 14.40 ஏக்கர் நிலத்தினை நில எடுப்பு சட்டம் 1894, அவசர பிரிவு 17(2) ன் படி கையகப்படுத்துவதற்கு அரசாணையில் குறிப்பிட்டுள்ள செலவுத்தொகை ரூ.18,29,74,500/— ஐ (ரூபாய் பதினெட்டு கோடியே இருபத்தொன்பது இலட்சத்து எழுபத்து நான்காயிரத்து ஐநூறு மட்டும்) மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்தி கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். 12069/06/MH5

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 309 நாள் : 24.12.2008</u>

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள 14.40 ஏக்கர் நிலத்திற்காக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நில மதிப்புத் தொகை ரூ. 18,29,74,500/- தற்போது அப்பகுதியில் நிலவிவரும் வெளிச்சந்தை விலையோடு ஒப்பீடு செய்கையில் மிகவும் அதிகமாக இருப்பதாக மாமன்றம் கருதுகிறது. எனவே விலை நிர்ணயம் குறித்த அனைத்து ஆய்வுகளையும் விதிமுறைகளின்படி பின்பற்றி மீண்டும் மாமன்றத்திற்கு பொருள் வைக்க தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 11

கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள கீழ்கண்ட நீர்நிலைகளை புனரமைத்து சீரமைக்கும் பணியை ரூ. 127.05 கோடி மதிப்பில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தின் கீழ் செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு மத்திய, மாநில அரசுகளின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

1. கிருஷ்ணம்பதி குளம்
2. செல்வம்பதி குளம்
3. குமாரசாமி / முத்தண்ணன் குளம்
4. கோயம்புத்தூர் பெரிய குளம்
5. நரசம்பதி குளம்
6. செல்வ சிந்தாமணி குளம்
7. வாளாங்குளம்
8. சிங்காநல்லூர் குளம்

பொதுப்பணித்துறை பராமரிப்பில் உள்ள மேற்கண்ட எட்டு நீர்நிலைகளிலும் தற்போது ஆக்கிரமிப்பு குடியிருப்புகள் அதிகளவில் உருவாகிவிட்டதாலும், நீண்ட காலமாக நீர்நிலைகள் தகுந்த பராமரிப்பின்றி இருந்த காரணத்தினால் தற்போது சிதிலமடைந்த நிலையில் உள்ளதாலும் மேற்கண்ட நீர்நிலைகளை புனரமைத்து மழைநீர் சேகரிப்பு பணிகளை மேற்கொள்வதால் நிலத்தடி நீர் சேகரிப்பு அதிகரிக்கும் பொருட்டு மேற்படி திட்டத்தினை மாநகராட்சியால் செயல்படுத்த தீர்மானிக்கப்பட்டது.

மாநகராட்சிக்கு சொந்தமான இடங்களில் மட்டுமே ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டப் பணிகளை மேற்கொள்ள இயலும் என்பதால் பொதுப்பணித்துறை வசம் உள்ள குளங்களை மாநகராட்சி வசம் ஒப்படைக்க அரசினை மாமன்றம் தனது தீர்மான எண் 249 நாள் 02.02.2007, தீர்மான எண் 73 நாள் 23.07.2007, மற்றும் தீர்மான எண் 209 நாள் 21.01.2008 மூலம் கேட்டுக்கொண்டது.

இதன் அடிப்படையில் தமிழக அரசு தனது அரசாணை (ப) எண் 240 நாள் 22.05.2008 –ல் கீழ்கண்ட நிபந்தனைகளுடன் மேற்படி திட்டப்பணியை மாநகராட்சியே ஒருமுறை செயலாக்கம் மூலம் மேம்படுத்த ஆணை பிறப்பித்த நிலையில் மேற்கண்ட எட்டு நீர்நிலைகளையும் மாநகராட்சி வசம் முழுமையாக ஒப்படைப்பு செய்ய அரசினை வலியுறுத்தி கேட்டுக் கொள்வதென்றும், அவ்வாறு ஒப்படைப்பு செய்த பின்னரே இத்திட்டத்தினை செயல்படுத்தலாம் என்று மாமன்றம் தனது தீர்மான எண் 126 நாள் 17.06.2008–ன் மூலம் தீர்மானம் செய்து அரசிற்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டது.

<u>நிபந்தனைகள்</u>:

i) மேற்படி குளங்களை ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புர புனரமைப்பு திட்டத்தின் (JNNURM) கீழ் மேம்படுத்தும் பணியை பொதுப்பணித்துறையின் தொழில் நுட்ப மேற்பார்வையின் கீழ் மாநகராட்சியே மேற்கொள்ள வேண்டும்.

ii) இது குறித்து விரிவான திட்ட அறிக்கைக்கான இசைவினை (Clearance of DPRS) பொதுப்பணித்துறையால் வழங்கப்பட வேண்டும்.

iii) கண்மாய்களை சுற்றியுள்ள கண்மாய் கரைபகுதிகளிலும், புறவாய் பகுதிகளிலும் பொழுதுபோக்கு மற்றும் நடையாளர்பாதைகள், சாலைகள், பூங்காக்கள் உருவாக்குதல் மற்றும் பராமரித்தல் ஆகிய பணிகளை மாநகராட்சியே மேற்கொள்ள வேண்டும்.

iv) இக்குளங்களில் ஆக்கிரமிப்பு செய்துள்ள சுமார் 7,000 குடும்பங்களை வெளியேற்றுதல் மற்றும் அவர்களுக்கான மறுவாழ்வை அளித்தல் குறித்து மாநகராட்சியே பொறுப்பேற்று நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

v) குளங்களை மேம்படுத்தும் பணி முடிந்த பிறகு இந்த குளங்கள் தொடர்ந்து பொதுப்பணித்துறையின் கட்டுப்பாட்டில் இருந்துவரும். **(After the completion of improvement work, the tanks will continue to be under the control of Public Works Department)**

vi) பொதுப்பணித் துறை பொறியாளர்களை, இக்குளங்களை மேம்படுத்தும் பணிக்காக அயற்பணி அடிப்படையில் தேவைக்கேற்ப மாநகராட்சியில் நியமித்துக்கொள்ளலாம்.

இந்நிலையில் ஏற்கனவே பொதுப்பணித்துறை அரசாணையில் குறிப்பிடப்பட்டிருந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டு மேற்குறிப்பிட்ட எட்டு நீர்நிலைகளையும் புனரமைத்து சீரமைக்கும் பணியினை உடனடியாக துவக்க வேண்டுமென்று அரசு செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களால் கடித எண் 27344/மா.ந.2/2008–1 நாள் 05.12.2008–ல் அறிவுறுத்தப்பட்டிருப்பதால் பொதுப்பணித்துறையின் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு இத்திட்டப்பணியினை செயல்படுத்தும் வகையில் மேல் நடவடிக்கைகளை தொடர மாமன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: தமிழக அரசின் பொதுப்பணித்துறையின் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு இத்திட்டப் பணியினை மாநரகாட்சி மூலம் செயல்படுத்தும் வகையில் மேல் நடவடிக்கைகனை தொடர மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண்: 13090/06/JN3

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 310 நாள் : 24.12.2008</u>

அ) பொதுப்பணித்துறைக்குச் சொந்தமான 8 குளங்களில் வரிசை எண் 3 நீங்கலாக மீதமுள்ள 7 குளங்களை மேம்படுத்தவும், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகையில் 30% சதவீத தொகையினை மாநகராட்சி ஏற்கவும் மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

ஆ) பொருளில் குறிப்பிட்டுள்ள குளங்களை புனரமைத்து சீரமைக்கும் பணிக்கு மாநகராட்சியால் 30% சதவீதத் தொகை செலுத்தி பங்கீட்டுப்பணி மேற்கொள்ளப்பட உள்ளதால், பொதுப்பணித்துறை வசம் உள்ள மேற்படி குளங்களை நீண்டகால குத்தகை அடிப்படையில் மாநகராட்சி பெற்று, வருவாய் தரக்கூடிய வகையில் மாநகராட்சி மூலம் திட்டங்களை செயல்படுத்தி, அதனால் வரும் வருவாயினை மாநகராட்சி பெற அரசினை வேண்டி உத்திரவு பெற மாமன்றம் தீர்மானிக்கப்பட்டது.

இ) பொருளில் வரிசை எண். 3 குமாரசாமி / முத்தண்ணன் குளம் பகுதியில் நீண்டகாலமாக வசித்துவரும் பொதுமக்கள் அவ்விடத்திலிருந்து வெளியேற விருப்பம் தெரிவிக்காததால், இக்குளத்தினில் நீர்பகுதி பாதிக்காத வண்ணம் குடியிருப்புகளை கணக்கிட்டு, குடியிருப்புப் பகுதி நீங்கலாக குளத்தினை சீரமைத்து மேம்படுத்தவும், இதுகுறித்து அரசிற்கு உரிய பிரேரணை அனுப்பி ஒப்புதல் பெறவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 12

பொருள் - பணியமைப்பு - கோயம்புத்தூா் மாநகராட்சி – களப்பணி உதவியாளா், துப்புரவுப் பணி மேற்பாா்வையாளா் - துப்புரவு ஆய்வாளராக நகராட்சிகளுக்கு பணி மாறுதல் செய்து உத்தரவு பிறப்பித்தல்- மாமன்ற இசைவு கோருதல் -தொடா்பாக.

பாா்வை- 1. அரசு ஆணை (நிலை) எண். 233 நகராட்சி நிா்வாகம் மற்றும் குடிநீா் வழங்கு (ந.ப.1) துறை நாள் 20.11.2008

2. நகராட்சி நிா்வாக ஆணையாளா், சென்னை அவா்களின் கடிதம் ந.க.எண். 7703 / 2008/ ஜே. 1 நாள் 20.11.2008

-------------

பாா்வை 1-ல் காணும் அரசாணையில் கோயம்புத்தூா் மாநகராட்சியில் களப்பணி உதவியாளராக பணிபுரியும் திரு. எஸ். சந்திரசேகரன், மற்றும் துப்புரவு பணி மேற்பாா்வையாளராக பணிபுரியும் திரு. என். லோகநாதன் ஆகியோா் துப்புரவு ஆய்வாளா் பயிற்சி முடித்து தோ்ச்சி பெற்றுள்ளதால் நகராட்சிகளில் காலியாக உள்ள துப்புரவு ஆய்வாளா் பணியிடங்களில் பணிபுரிவதற்கு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

பாா்வை 2-ல் காணும் நகராட்சி நிா்வாக ஆணையா் அவா்களின் கடிதத்தில் நகராட்சிகளில் காலியாக உள்ள துப்புரவு ஆய்வாளா் பணியிடங்களில் களப்பணி உதவியாளா் திரு எஸ். சந்திரசேகரன் மற்றும் துப்புரவு மேற்பாா்வையாளா் திரு என். லோகநாதன் ஆகியோா்களை பணிபுரிய மாநகர மாமன்றத்தின் இசைவினைப் பெற்று உடன் அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, கோவை மாநகராட்சியில் களப்பணி உதவியாளராக பணிபுரியும் திரு எஸ். சந்திரசேகரன் மற்றும் துப்புரவுப் பணி மேற்பாா்வையாளராக பணிபுரியும் திரு என். லோகநாதன் ஆகியோரை நகராட்சிகளில் காலியாக உள்ள துப்புரவு ஆய்வாளா் பணியிடத்தில் பதவி உயா்வின் மூலம் துப்புரவு ஆய்வாளராக நியமனம் செய்வதற்கு இசைவு தெரிவிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 16025/ 2008/ எம்.சி. 3

<u>மா.ந.ம.தீா்மானம் எண் : 311 நாள் : 24.12.2008</u>

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

## பொருள் எண் 13

பொருள் - ஊா் பொதுமக்கள், குப்பகோணம்புதுா் - நகரளவை ஆவணங்களில் சங்கனுாா் கிராமம் க.ச.எண். 305, 306 ஊா் நத்தம் என மாற்றி நிலவகைபாடு அமைத்து தரும்படி கோருதல் - தொடா்பாக.

-------------

கோயம்புத்தூா் மாநகராட்சி மேற்கு மண்டலம் சங்கனுாா் கிராமம் க.ச.எண். 305, 306 காலை குப்பக்கோணம்புதுா் பகுதியில் நகரளவை ஆவணங்களில் “ ஊா் நத்தம்’’ என இருந்ததை வண்டிப்பாதை என திருத்தம் செய்யப்பட்டது எனவும், மீண்டும் ஆரம்பகால சா்வே ஆவணங்களின்படி ஊா் நத்தம் என மாற்றியமைத்துத் தரும்படி விண்ணப்பம் சமா்ப்பித்துள்ளனா். தற்சமயம் நகரளவையா் கருத்துப்படி வண்டிப்பாதை என நகரளவை ஆவணங்களில் உள்ளது.

மேற்காண் பகுதியில் பழைய ஓட்டு வில்லை கட்டிடங்களில் பொதுமக்கள் 50 ஆண்டுகளாக வசித்து வருகின்றனா். இப்பொருள் தொடா்பாக நகரளவையா், மாவட்ட ஆட்சித் தலைவா் அலுவலகத்தை நேரடியாக அணுகி விபரம் சேகரித்துள்ளாா். மாவட்ட ஆட்சித் தலைவா் அலுவலகத்தில் மேற்காண் “வண்டிப்பாதை’’ என்கிற நிலம், “ஊா் நத்தம் ’’ என மாற்றம் செய்வதற்கு மாமன்ற ஒப்புதல் எதிா்நோக்கி உள்ளனா்.

எனவே மேற்காண் பொருள் குறித்து முடிவு செய்வதற்கு மாமன்றத்திற்கு பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - மாமன்றம் முடிவு செய்யலாம். ந.க.எண். 10659/08/எச்1 (மே)

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 312 நாள் : 24.12.2008</u>

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள நில வகைப்பாட்டினை ''ஊர்நத்தம்'' என மாற்றம் செய்ய ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 14

பொருள் : கடைகள் - கோயமுத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலத்திற்குட்பட்ட உக்கடம் பேருந்து நிலையம் 'ஆவின்' பாலகப் பெட்டி ஒதுக்கீடு – தொடர்பாக.

பார்வை : 1) வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.6 நாள்.17.11.2008

-------------------------

கோயமுத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட உக்கடம் பேருந்து நிலையத்தில் 'ஆவின்' பாலகப்பெட்டி 8'x8' சதுர அடியில் அமைத்திட கோவை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் லிமிட்டெட் (ஆவின் பாலகம்) விண்ணப்பித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட நிறுவனமானது அரசு சார்பு நிறுவனம் ஆகும். எனவே, பொது ஏலம் தவிர்த்து 'ஆவின்' பாலகப் பெட்டியை இந்நிறுவனத்திற்கு ஓதுக்கீடு செய்யலாம் . இதற்கு மாத வாடகை ரூ.1680/- என 40வது வார்டு உதவி பொறியாளர் நேராய்வு செய்து தெரிவித்துள்ளார்.

எனவே , மேற்படி கடையை ஓதுக்கீடு செய்ய பார்வை (1) ல் காணும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி பெற்று மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம் ந.க. எண்.7184/08/அ10

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 313 நாள் : 24.12.2008</u>

பொருள் ரத்து செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 15

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட, அங்கீகாரமற்ற மனைப்பிரிவு மனைகளை முறைப்படுத்தி கொள்ள, தமிழக அரசு, அரசாணை எண். 59, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள். 25.7.2006 அன்று வெளியிடப்பட்டு, நிபந்தனைகளுக்குட்பட்டு நெறிமுறைப்படுத்தப்பட்டு வந்தது. இதன் கால அவகாசம் 31.12.2007 –ம் தேதியுடன் நிறைவு பெற்றது.

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் மேற்காண் அரசாணை நிபந்தனைப்படி, நெறிமுறைப்படுத்த இயலாத, அனுமதியற்ற மனைப்பரிவு, மனை உரிமையாளருக்கு, மீண்டும் வாய்ப்பு வழங்கும் பொருட்டு தமிழக அரசால், அரசாணை எண். 244, ந.நி (ம) கு.வ துறை நாள். 5.12.2008 முதல் மேலும் ஆறு மாத கால நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

எனவே அரசாணை எண். 59 –ல் கண்டுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் அனுமதியற்ற மனை உரிமையாளர்கள் மீண்டும் விண்ணப்பித்து நெறிமுறைப்படுத்தி கொள்வது தொடர்பான அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு. பதிவு செய்யலாம் ந.க.எண் 12042 / 1999 / எம்.எச்5

<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 314 நாள் : 24.12.2008</u>

அரசாணை எண். 244 ந.நி.(ம) கு.வ.துறை நாள் 5.12.2008 பதிவு செய்யப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 16

பொருள் : குத்தகை – 2007 -2008 – கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட குத்தகை இனம் எண். 24 – காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் (தளம் , 1 , 2, 3, 4) நவீன பொதுக் கழிப்பிடம் - பராமரிப்புக் கால இழப்பீடு வழங்குதல் - தொடர்பாக.

பார்வை : 1. 13.03.2007 ம் தேதிய பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி.

2. திரு. சி.செல்வம் என்பவரின் ஏலம் கோரிக்கை/ ஒப்பந்தப்புள்ளி.

3. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவரின் முன் அனுமதி நாள் 28-03-2007.

4. மாமன்ற தீர்மானம் எண்.299 நாள்.30-3-2007.

5. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.5 நாள்.17.11.2008

---

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட குத்தகை இனம் எண் 24– காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் ( தளம் 1, 2, 3, 4) நவீன பொதுக் கழிப்பிட கட்டணம் வசூலிக்கும் உரிமம் 2007 – 2008ம் ஆண்டில் ஏலத்தொகையாக ரூ. 14,55,000/- கோரிய திரு. சி.செல்வம் என்பவருக்கு ஒப்படை செய்யப்பட்டது.

இந்நிலையில் கடந்த 21.01.2008 முதல் 31.03.2008 வரை தளம் எண் 3 பராமரிப்பு பணிகளுக்காக முழுமையாக மூடப்பட்டு பணிகள் நடைபெற்றதாக உதவிப்பொறியாளர் தனது குறிப்பு நாள் 16.04.2008ல் தெரிவித்துள்ளார். எனவே உரிமதாரர், திரு சி.செல்வம் என்பவர், மூடப்பட்ட நாட்களான 71 நாட்களுக்கு இழப்பீட்டுத் தொகையை நாளொன்றுக்கு ரூ.2500/- வீதம் திரும்பக் கேட்டு கடிதம் நாள் 20-03-2008 அன்று கோரியுள்ளார். இதன் விவரங்கள் பின்வருமாறு.

| | |
|---|---|
| மொத்த ஏலத் தொகை (365 நாட்கள்) | ரூ.14,55,000.00 |
| ஒரு நாளைக்கு | ரூ. 3,986.30 |
| 71 நாட்களுக்கான இழப்பீட்டுத் தொகை | ரூ. 2,83,027.30 |

<u>உரிமதாரர் கோரியுள்ள இழப்பீட்டுத்தொகை</u>

| | |
|---|---|
| ஒரு நாளைக்கு | ரூ. 2,500.00 |
| 71 நாட்களுக்கான இழப்பீட்டுத் தொகை | ரூ. 1,77,500.00 |

மேற்கண்ட விவரங்களில் இருந்து பராமரிப்பு காலத்தில் எற்பட்ட இழப்பீட்டுத் தொகையை விட உரிமதாரர் குறைவாகக் கோரியுள்ளதாலும், இவரது கோரிக்கை நியாயமாக இருப்பதாலும் 71 நாட்களுக்கான இழப்பீட்டுத் தொகை ரூ. 1,77,500/-ஐ திரும்ப வழங்க பார்வை (5)ல் காணும் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி பெற்று மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.2831/08/அ5

**மா.ந.ம.தீர்மானம் எண் : 315 நாள் : 24.12.2008**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் 17.11.2008 ம் தேதிய தீர்மானம் எண். 5-ஐ ஏற்று அலுவலகக்குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 17

பொருள். மனுதாரர் - திரு. விக்ரம் மோகன் என்பவர், கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம், உப்பிலிபாளையம் கிராமம், காமராஜ் சாலை, க.ச. எண். 457 / 1, 458 / 1 –ல் பலமாடி குடியிருப்புக் கட்டிடம் கட்ட அனுமதி கோரி 20.12.2006 –ல் உரிய கட்டணங்களை கீழ்க்கண்டவாறு செலுத்தி விண்ணப்பித்துள்ளார்.

* * *

| வ. எண் | கட்டணம் விபரம் | தொகை | ரசீது எண் | நாள் |
|---|---|---|---|---|
| 1 | கட்டிட உரிமக் கட்டணம் | 13,07,800/- | 200612201545 | 20.12.2006 |
| 2 | சேவைக் கட்டணம் | 68,875/- | 200612201552 | 20.12.2006 |
| 3 | தொழிலாளர் நல நிதி | 8,82,775/- | 200612201561 | 20.12.2006 |
| 4 | பாதாள சாக்கடை வைப்புத் தொகை | 7,50,000/- | 200704261259 | 26.04.2007 |

தற்போது மனுதாரர் 4.9.2008 –ம் தேதிய விண்ணப்பத்தில் தனது சொந்தகாரணங்களுக்காக கட்டிடம் கட்டும் உத்தேசத்தினை கைவிடுவதாகவும், அதற்கு கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமத்தில் உத்தேசத்தினை வாபஸ் பெற்றுள்ளதாகவும் தெரிவித்து, கட்டிடம் கட்ட அனுமதி கோரி விண்ணப்பித்தபோது, தான் செலுத்தியுள்ள கட்டணங்களை திரும்ப வழங்குமாறும், அக்கட்டணங்களை திருமதி. கே. அமுதா பெயரில் வழங்குமாறு நோட்டரி பப்ளிக் உறுதிப் பத்திரம் சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி மனுதாரரின் கட்டிடம் கட்ட உத்தேசத்தின் மீது திட்ட அனுமதி வேண்டி கோவை உள்ளூர் திட்டக் குழுமத்திற்கு 4.5.2007 –ல் அனுப்பப்பட்டு, தற்போது மனுதாரர் உத்தேசத்தினை வாபஸ் பெற்றதால், கோவை உள்ளூர் திட்டக் குழுமத்தின் கடித ந.க. எண். 2162 / 2007 / உதிகு -2 நாள். 1.8.2008 –ன்படி, உத்தேசம் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மாநகர மன்ற தீர்மான எண். 400 நாள். 28.3.2002 –ம் தேதிய தீர்மானத்தில் கோயம்புத்தூர் மாநகர எல்லைக்குள் கட்டப்படும் கட்டிடங்களுக்கு உரிமம் வழங்குதல் மற்றும் இயந்திர நிறுவனங்களுக்கு அனுமதி வழங்குதல் ஆகியவைகளுக்கு திருத்திய கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி வரிசை எண். 6-ல் அனுமதி மறுக்கப்பட்ட மற்றும் திருப்பி அனுப்பப்பட்ட கட்டிட உரிமையாளர்கள் கட்டிடம் கட்டும் உத்தேசத்தை கைவிட்டு, தான் செலுத்திய உரிமக் கட்டணத்தை திருப்பி கேட்டு மனு செய்யும் பொழுது உரிமக் கட்டணம் மற்றும் சேவைக் கட்டணம் ஆகியவற்றில் 25 % ஆய்வு மற்றும் நிர்வாக செலவுகளுக்கு பிடித்தம் செய்து மீதியை திருப்பிக் கொடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சொத்து வரி 2007 – 2008 இரண்டாம் அரையாண்டு வரை மாநகராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளது.

மேற்படி மனுதாரர் செலுத்திய உரிமக் கட்டணம் மற்றும் சேவைக் கட்டணத்தில் கூராய்வுக் கட்டணம் 25 % தொகையை பிடித்தம் செய்யவும், பாதாள சாக்கடை வைப்புத் தொகை முழுவதும் வழங்கலாம் என்று உதவி நகரமைப்பு அலுவலர் குறிப்பில் தெரிவிக்கப்பட்டு ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் 17.10.2008 –ல் பெறப்பட்டுள்ளது.

எனவே மனுதாரர் செலுத்திய கட்டணங்களில் தொழிலாளர் நல நிதி கட்டணம் தவிர,

1. உரிமக் கட்டணம் ரூ. 13,07,800 /–ல் 25 % பிடித்தம் போக மீதி ரூ. 9,80,850 /- ம்
2. சேவைக் கட்டணம் ரூ. 68,875 /–ல் 25 % பிடித்தம் போக மீதி ரூ. 51,656 /- ம்
3. பாதாள சாக்கடை வைப்புத் தொகை ரூ. 7,50,000 முழுவதும் திருமதி. கே. அமுதா (மனுதாரர் திரு. விக்ரம் மோகனுக்காக) பெயரில் திரும்ப வழங்குவது குறித்து மாநகர மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு. மன்றத்தின் முடிவிற்கு. ந.க. எண். 13502 / 2008 / எச்1 கி.

**<u>மா.ந.ம.தீர்மானம் எண் : 316 நாள் : 24.12.2008</u>**

பொருளில் குறிப்பிட்டுள்ளவாறு கட்டிட உரிமக் கட்டணம், சேவைக் கட்டணம் ஆகியவற்றில் 25% பிடித்தம் செய்துகொண்டு மீதமுள்ள தொகையினை வழங்கவும், பாதாள சாக்கடை வைப்புத் தொகை முழுவதையும் திரும்ப செலுத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

இத்தொகையினை மனுதாரர் திரு. விக்ரம் மோகனுக்காக திருமதி. கே. அமுதா என்பவர் பெயரில் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 18

பொருள்- கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட கீழ்குறிப்பிட்டுள்ள வருடாந்திர உரிம இனங்களை 2009-2010ம் ஆண்டிற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப் புள்ளிகள் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டியுள்ளது - தொடர்பாக.

பார்வை - வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண்.8 நாள்.17.11.2008.

------------

<u>ஏல இனங்கள்</u>

1. தியாகி குமரன் மார்க்கெட்டில் தரைக்கடைகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
2. ராமர் கோயில் வீதி மார்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
3. போத்தனூர் ரோடு, லாரிப் பேட்டை மொத்த வியாபார மீன் மார்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
4. போத்தனூர் ரோடு, லாரிப் பேட்டையில் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
5. தியாகி குமரன் மார்க்கெட் உட்புறம் உள்ள இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனக் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
6. உக்கடம் பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
7. காந்திபுரம் நகரப்பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
8. காந்திபுரம் மத்தியப்பேருந்து நிலையம் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
9. காந்திபுரம் மத்தியப்பேருந்து நிலையம் தரைத்தளம் மற்றும் 5வது தளம் சைக்கிள் மற்றும் இருசக்கர வாகனங்கள் நிறுத்தக் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
10. காந்திபுரம் நகரப்பேருந்து நிலையத்தில் சைக்கிள் மற்றும் இருசக்கர வாகனங்கள் நிறுத்தக் கட்டணம் வசூலிக்கும் உரிமம் (கடை உரிமைதாரர்களுக்கு வாகன நிறுத்த ஒதுக்கப்பட்ட பகுதி நீங்கலாக).
11. இராஜவீதி மருந்தகவளாகம் இருசக்கர மற்றும் நான்கு சக்கர வானங்கள் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
12. மத்திய பேருந்து நிலையம் - இரவு தங்குவதற்கு மற்றும் பொருட்கள் பாதுகாப்பதற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
13. வ.உ.சி.பூங்கா மிருகக்காட்சி சாலைக்கு நுழைவுக்கட்டணம் மற்றும் சிறுவர் விளையாடும் இடங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
14. குரு ஹோட்டல் அருகில் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
15. ஆடு அறுவை மனை, உக்கடம்.
16. நவீனப்பொதுக்கழிப்பிடம், லிங்கப்ப செட்டி வீதி.
17. நவீனப் பொதுக்கழிப்பிடம் தியாகிகுமரன் மார்க்கெட்.
18. நவீனப் பொதுக்கழிப்பிடம், உக்கடம் பேருந்து நிலையம்.
19. நவீனப் பொதுக்கழிப்பிடம், போத்தனூர் லாரிப்பேட்டை
20. நவீனப் பொதுக்கழிப்பிடம் காந்திபுரம் நகரப் பேருந்து நிலையம் (ஆர்.வி.ஹோட்டல் அருகில்)
21. நவீனப் பொதுக்கழிப்பிடம், காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் (தளம் 1, 2, 3, 4)
22. நவீனப் பொதுக் கழிப்பிடம், வ.உ.சி.பூங்கா வளாகம்
23. நவீனப் பொதுக் கழிப்பிடம், உப்பிலிபாளையம்
24. நவீனப் பொதுக் கழிப்பிடம், டவுன்ஹால் அருகில்
25. நவீனப் பொதுக்கழிப்பிடம், செட்டிவீதி
26. நவீனப் பொதுக்கழிப்பிடம், தர்மராஜா கோவில் வீதி
27. பொருள் காப்பகம், உக்கடம் பேருந்து நிலையம்
28. நவீனப் பொதுக்கழிப்பிடம், காந்திபுரம் நகரப்பேருந்து நிலையம் B3 காவல் நிலையம் அருகில்.

<u>புதிதாக சேர்க்கப்பட வேண்டிய இனங்கள்</u>

29 காந்திபுரம் மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள தங்கும் விடுதியில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் மூன்று வருடங்களுக்கு (01.04.2009 முதல் 31.03.2012 வரை).

30 அவினாசி சாலை மாநகராட்சி வணிக வளாகத்தில் உள்ள பாஸ்போர்ட் அலுவலகத்தின் முன்புறம் அமைந்துள்ள இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.

<u>2008-09ம் ஆண்டு ஏல இனப்பட்டியலில் இருந்து 2009-10ம் ஆண்டு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப் புள்ளியில் நீக்கம் செய்யப்பட வேண்டிய இனங்கள்</u>

| வ. எண் | 2008-09ம் ஆண்டு ஏல இன வரிசை எண் | இனம் | நீக்கம் செய்யப்பட வேண்டியதற்கான காரணம் |
|---|---|---|---|
| 1. | 14 | வ.உ.சி.பூங்கா சிறுவர் ரயில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | பழுதுபார்க்கும் பணி மேற்கொள்ளப்பட உள்ளதால், இதனை நீக்கம் செய்யலாம். |
| 2. | 15 | தியாகிகுமரன் மார்க்கெட் மத்தியில் அமைந்துள்ள ரோட்டின் கிழபுறத்தில் தென்வடலாக உள்ள இடத்தில் சைக்கிள் மற்றும் இரு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம். | மாமன்ற உறுப்பினர் கோரிக்கையின் அடிப்படையில் உதவிப்பொறியாளர் குறிப்பின்படி இந்த இடம் பொது நடைபாதையாக மாற்றப்பட உள்ளதால், இதனை நீக்கம் செய்யலாம். |
| 3. | 29 | மாநகராட்சி எல்லையில் உள்ள 48 புளிய மரங்களில் காய்க்கும் புளியங்காய்களை பறித்துக்கொள்ளும் உரிமம். | <u>வரிசை எண். 3 முதல் 7 வரை</u><br><br>கடந்த ஆண்டுகளில் இந்த இனங்கள் மிகக் குறைந்த தொகைக்கே ஏலம் சென்றுள்ளதாலும் தற்போது ஏராளமான தென்னை மரங்கள் பட்டுபோன நிலையில் உள்ளதாலும், மேலும் குத்தகைத் தொகையானது விளம்பரச் செலவைக்காட்டிலும் குறைவாகவும் உள்ளதனால், இந்த இனங்களை நீக்கம் செய்யலாம். |
| 4. | 30 | உக்கடம் ஆடு அறுவை மனைக்கு மேற்புறம் ஓடும் சாக்கடை நீரை பயன்படுத்திக் கொள்ளும் உரிமம். | |
| 5. | 31 | வைசியாள் வீதியும், சுப்ரி வீதியும் சந்திக்கும் இடத்தில் ஓடும் சாக்கடை நீரை பயன்படுத்திக் கொள்ளும் உரிமம். | |
| 6. | 32 | கழிவுநீர்ப் பண்ணையில் உள்ள 154 தென்னை மரங்களில் விளையும் தேங்காய்களை பறித்துக்கொள்ளும் உரிமம். | |
| 7. | 33 | மாநகராட்சி தெற்கு மண்டல எல்லைக்குள் உள்ள 28 தென்னை மரங்களில் விளையும் தேங்காய்களை பறித்துக் கொள்ளும் உரிமம். | |

உரிம இனங்களை ஏலம் விடவும் அதற்கான நிபந்தனைகளுக்கு ஒப்புதல் வழங்கவும் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதிக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

<u>அலுவலககுறிப்பு</u>

1) மேற்படி வரிசை எண்.1 முதல் 30 வரையிலான வருடாந்திர உரிம இனங்களை 2009- 10ம் ஆண்டுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப் புள்ளி கோரலாம்.

2) இதில் மேற்குறிப்பிட்டுள்ள வரிசை எண்.16 முதல் 28 வரை உள்ள நவீனகட்டண கழிப்பிடங்கள் மகளிர் சுய உதவிக்குழுக்கள் மட்டும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப் புள்ளியில் கலந்து கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

3) நீக்கம் செய்யப்பட வேண்டிய இனங்களை 2009-10ம் ஆண்டு ஏலப்பட்டியலில் இருந்து நீக்கம் செய்யலாம்.

4) ஏற்கனவே உள்ள பொது ஏல நிபந்தனைகளுடன் கீழ்க்குறிப்பிட்டுள்ள ஏல நிபந்தனைகளை சேர்க்கப்பட வேண்டியுள்ளது.

அ) பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளும் குத்தகைதாரர்கள் கண்டிப்பாக TAN NO. பெற்று இருத்தல் வேண்டும். இந்த எண் இல்லாதவர்கள் கண்டிப்பாக பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள அனுமதிக்கப் படமாட்டார்கள்.
ஆ) உரிமம் பெற்ற ஏலதாரர்களிடமிருந்து தொழில்வரி வசூல் செய்து கொண்டு உரிமம் ஒப்படை செய்யலாம்.

5) பார்வை (1)ல் காணும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின்படி வரிசை எண் 16 முதல் 28 வரை உள்ள நவீனக்கட்டண கழிப்பிடங்கள் அந்தந்த வட்டார மாமன்ற உறுப்பினர்களின் ஆலோசனை பெற்று ஏலம் விடலாம்.

6) பார்வை (1)ல் காணும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின்படி வரிசை எண் 29ல் உள்ள காந்திபுரம் மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள தங்கும் விடுதியை அலுவலக வளாகமாக மாற்றுவது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

7) மேற்படி ஏல நிபந்தனை அறிக்கையினை 200 பிரதிகள் அச்சிட்டுப் பெறவும், மாவட்ட அரசிதழ் பதிவில் வெளியிடவும் ஏற்பாடு செய்யலாம். மேலும், ஏல அறிக்கையினை நாளேடுகளில் விளம்பரம் செய்து இவைகளுக்காகும் செலவினங்களை ஏற்கலாம். ஏலம் போகாத இனங்களுக்கு துறை மூலம் வசூலிக்கத் தேவைப்படும் கட்டண ரசீதுகளை அச்சடித்துக்கொள்ளவும், இதற்காகும் செலவினங்களை ஏற்கலாம்.

ந.க.எண். 9431/08/அ5

**மா.ந.ம.தீர்மானம் எண் : 317 நாள் : 24.12.2008**

1. பொருளில் வரிசை எண். 12 மத்திய பேருந்து நிலையம்/ இரவு தங்குவதற்கு மற்றும் பொருள்கள் பாதுகாப்பதற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் ரத்து செய்ய தீர்மானிக்கப்பட்டது.

2. பொருளில் வரிசை எண். 29-ல் உள்ள காந்திபுரம் மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள தங்கும் விடுதியை அலுவலக வளாகமாக மாற்ற தீர்மானிக்கப்பட்டது.

3. பொருளில் வரிசை எண். 15, ஆடு அறுவைமனை, உக்கடம் என்பது வார்டு எண். 54, ஆடு அறுவை மனை, உக்கடம் என பதிவு செய்யப்பட்டது.

4. 2008-09 ம் ஆண்டு ஏல இன பட்டியலிலிருந்து வரிசை எண்கள் 14, 15, 29, 30, 31, 32 மற்றும் 33 ஆகிய இனங்களை 2009-10 ம் ஆண்டு ஏலத்திற்கு நீக்கம் செய்ய தீர்மானிக்கப்பட்டது.

5. பொருளில் வரிசை எண் 16 முதல் 28 வரையுள்ள நவீன கட்டண கழிப்பிடங்களுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் மகளிர் சுய உதவிக்குழுக்கள் மட்டும் கலந்து கொள்ள அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

6. அலுவலகக் குறிப்பு 4-ல் உள்ள கூடுதல் நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

7. அலுவலகக் குறிப்பு (7) அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி